முதன்மை வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றம், திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**R.LTO.P.No. 19/2025**

24.03.2026 மா.சா.1 திரு. தீபக் மைக்கேல் ராஜா

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எதிர் உரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எதிர் உரையில் எங்கள் திருச்சபையின் அனுமதி பெற்று தாவா சொத்தின் கழிப்பறை மற்றும் குளியலரை ஆகியவற்றை சரி செய்து பெயிண்ட் அடித்ததால் ரூ. 3,00, 000/- செலவாகிவிட்டது என சொல்லப்பட்டது என்றால் சரிதான். மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி, பாதாள சாக்கடை மற்றும் மின்சார வரி ஆகியவற்றை எதிர்மனுதாரர் செலுத்தி வந்தார் என்று சொன்னால் ஒரு முறை மட்டும் செலுத்தினார் அதன் பின்னர் மரைமாவட்டத்தின் அனுமதி இல்லாமல் செலுத்தி வந்தார் சாட்சி மீண்டும் தானாக முன் வந்து கோமதி நாயகம் என்பவர் தான் ஒரு முறை செலுத்தினார் இந்த எதிர்மனுதாரர் எதுவும் செலுத்தவில்லை என சாட்சியம் அளித்தார். கோமதி நாயகம் என்பவர் ஒரு முறை செலுத்தியதாகவும் எதிர்மனுதாரர் செலுத்தவில்லை என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
2. எதிர்மனுதாரர் 2015 ஆண்டு முதல் தற்போது வரை அரசுக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் எங்களுக்கு செலுத்த வேண்டிய வாடகையை தவறாது செலுத்தி வந்தார் என்றும் நான் வழக்கிற்காக வாடகை பாக்கி செலுத்த வில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
3. எதிர்மனுதாரர் வாடகை பாக்கி வைத்துள்ள சம்பவம் குறித்து எங்கள் அலுவலக கணக்கு வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் உண்மை தெரிய வரும் என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரர்

முந்தைய பொருளாளரிடம் 2015 ம் ஆண்டு ஏற்படுத்திக் கொண்ட வாடகை ஒப்பந்தம் எங்கள் அலுவலகத்தில் உள்ளது என்றும் இந்த வழக்கிற்காக அது மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை. அப்படி ஏற்படுத்தி இருந்தால் அதை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை.

4. ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் குடியிருந்து வரும் எதிர்மனுதாரருக்கு எந்த வாடகை பாக்கியும் நிலுவையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்து வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை கஷ்ட நஷ்ட படுத்த வேண்டும் என்று உள்நோக்கத்தில் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்ய தக்கது என்று சொன்னால் சரியல்ல.

5. நான் கேட்டுள்ள இந்த பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 24.03.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.03.24 18:02:58 +0530

Principal District Munsif,
Tirunelveli.